S Mahesu.

# கலை ஓசை

கலை இலக்கிய சமூக சஞ்சிகை

ஐப்பசி 2006 ஒலி 04



பலமுகம் வேண்டாம்
ஒரு முகம் காட்டு
பதுமையே! உனக்கதே அழகு - வரும்
தடையினை உடைத்து
தலையினை நிமிர்த்து - உன்
பெருமையை அறியும் இவ்வுலகு!

கலைகளைச் சொல்வோம்; துயர்களை வெல்வோம்

# ஒலி நயத்தில்....


- கட்டுரைகள்
  - தாவீது கிறிஸ்ரோ
  - எஸ். சத்தியன்
  - பிரான்சிஸ் லோசுநிசாமி
- சிறுகதை
  - யா.ரோ.
- குறுங்கதை
  - திருமலை சுந்தா
- கவிதைகள்
  - கவிஞர். சு. வில்வரத்தினம்
  - வெந்நீரூற்றான்
  - சிசு
  - பரிதி
- மழலையர் ஒலி
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்


## உடன்போக்கு

ஒளிமுகம் கொண்டு
இறங்கி வருகிறது
கவிதை
உள் பூத்த அமைதியுடன்

ஒளிமுகம் இலாததை
கவிதை எனலாமா?
ஒளி முகிக்கு
காலை வணக்கம் சொல்லிக்
கடந்து மேற்செல்கிறேன்

'எங்கே போகிறாய்?'
ஒளிமுகி கேட்கிறாள்
'உச்சிப் புலம் நோக்கி
கவி முடிதரிக்க' என்கிறேன்

'எழுதுகோலாய்
ஒளிவிழுதிறக்கி
வருகிறேன் உனை நோக்கி
பிறகேன் உச்சியை நோக்கிய பயணம்?''

'உன்னதம் விளைவது உச்சியிலல்லவா?'

'விளைச்சலே உன் வீட்டுத்
தரை தேடி வருகிறது
பிறகேன் அலைச்சல்'?

'எனக்கு வேண்டுவது எனது
அனுபவ விளைச்சல்'
ஏனது இந்த மண்ணில் விளையாதா?
ஏற்றம் இறைக்கவுன்
தோட்டக் கிணறில்லையா?'

'உண்டு'
'எனின் தண்ணீர் இறைப்பு நிகழ்த்து
தாய் வாய்க்காலின் ஊடே
ஒளிநீர்பாயும் படுகை தொறும் கவிதை
முளைதிறன் காண்!

இங்ஙனம் உரைத்து ஒளிமுகி வழி நடந்தாள்
இட்ட அடிதோறும் ஒளித்தடம்
எடுத்த அடிதோறும் ஒளி எறிகை
பள்ளப்புலமெங்கும் பாத ஒளிச்சூழ் மலர்வு
புல்நுனிகள் தோறும் புதுவருடும் ஒளிச் சுடர்வு
கால ஒளிக்கோட்டில் காதற்சுவடெறிகை
'புதிய கட்டுமானப்பணிகளில்
பூப்பெய்தப்போகும் என்னை
ஒளியுறக் கூடுக' என்றழைத்தனள்
ஒப்பினேன் ;
ஒளிமுகியோடு புணர்வுறும் எனது
உடன்போக்கு தொடங்கியது.

04.06.04
கவிஞர்.சு. வில்வரத்தினம்

# கலை ஓசை

திருமறைக் கலாமன்றம்

Center for Performing Arts

கலை இலக்கிய சமூக சஞ்சிகை

| ஆசிரியர் | உதவி ஆசிரியர்கள் | இதழ் வடிவமைப்பு | வெளியீடு |
|---|---|---|---|
| மு. யாழவன் | யோ. பார்த்தீபன் | மு. யாழவன் | இளையோர் அவை |
| | எஸ். சத்தியன் | | திருமறைக் கலாமன்றம் |


## எமது கடமை

சிறுவர்தினம், முதியோர் தினம், ஆசிரியர் தினம், அஞ்சல் தினம், உளவளதினம் என இம்மாதத்தில் பல தினங்களை நாம் கொண்டாடினோம். இவற்றுள் சிறுவர், முதியோர் தினங்கள் என்பன இம்மாதம் முதலாம் திகதியும், ஆசிரியர் தினம் 6ம் திகதியும், அஞ்சல் தினம் 9ம் திகதியும், உளவள தினம் 10ம் திகதியும் கொண்டாடப்பட்டது.

இவற்றுள் சிறுவர்தினம், முதியோர் தினம் என்பன பற்றி நோக்கும்போது எமது நாட்டைப் பொறுத்தவரை இவ்விரு தினங்களும் கொண்டாடப்படவேண்டியதும், நினைவுபடுத்தப்படவேண்டியதும் நமது கடமையாகும். ஏனெனில் எமது நாட்டில் சிறுவர்களுக்கும், வயோதிபர்களுக்கும் இழைக்கப்படுகின்ற அநீதிகள் எண்ணுக் கணக்கற்றவை.

அதிலும் சிறுவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகள் அதிகம். அவர்கள் உடலாலும், உள்ளத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். யுத்தத்தாலும், சுனாமியாலும், வறுமையாலும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளிலேயே அதிகமாகவுள்ளனர். மலையகத்திலும் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டு துன்புறுத்தப்படுகின்ற சேதிகளை பத்திரிகைகள் வாயிலாகவும், இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாகவும் நாம் அறிகின்றோம்.

இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே எமது எதிர்கால சந்ததியினராகிய இன்றைய சிறுவர்களை பாதுகாப்பதும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை குறிப்பாக கல்வி கற்பதற்கேற்ற வசதிகளை செய்து கொடுப்பதும் எமது கடமையாகும்.

- ஆசிரியர் -

கலை ஓசை தாங்கி வரும் ஆக்கங்கள் யாவிற்கும் ஆக்கியோரே பொறுப்புடையவராவர். புனைபெயரில் எழுதுபவர்கள் தங்களது முழு விபரத்தினையும் எமக்கு ஆக்கங்களுடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.


**அஞ்சல் முகவரி**

ஆசிரியர்,
கலை ஓசை,
'தூர்வொலயா'
33/31, சிவபுரி,
திருக்கோணமலை.

# தன்னை விலைபேசாத ஒரு கவிஞனைப் பற்றிய சில பதிவுகளும் கடந்தகால நினைவுகளும்

- தாவீது கிறிஸ்ரோ -

மார்க்சிய ஈடுபாடும் அதனோடு இணைந்த கட்சிச் செயற்பாடும் முகிழ்ந்த எழுபதுகளின் முற்கூறு. நான். டானியல் அன்ரனி. ராதேயன். சசிகிருஸ்ணமூர்த்தி. பாலகிரி என வெளிவட்டுவ நண்பர்கள் கூட்டம். என்னை விட மற்றவர்கள் "செம்மலர்கள்" இலக்கிய வட்டத்தைச் சேர்ந்தவர்கள். நான் கட்சிச் செயற்பாட்டாளன். அவர்கள் 'அணு' எனும் சஞ்சிகையை வெளியிட்டுக் கொண்டிருந்தனர். யாழ் நூலக கேட்போர் கூடத்தில் அடிக்கடி நூல் வெளியீடுகள். நாமெல்லாம் புதுச் சிவப்புக்கூட்டங்களாக பிறரால் கணிக்கப்பட்ட காலம். சுப்பிரமணியம் பூங்கா, றீகல் தியேட்டர் மருங்கிலுள்ள தகரக்கொட்டகைத் தேனீர்க்கடை பெரியாஸ்பத்திரியின் பதிவாளர் அறைவாயில், (அப்போது ராதேயன் அங்கு ஒரு தற்காலிக ஊழியர்) ஐந்து சந்தி, நாவாந்துறை என காலநேரமற்ற சந்திப்புக்களும் விவாதங்களும் நள்ளிரவுவரை வெறும் தேனீருடன் காரசாரமான விமர்சனங்கள் தொடரும். இறுக்கமான விவாதம் முரண்பாடுகளுடன் முடியும். எனது வாதங்கள் நெத்தியடியாக இருக்கும். மீண்டும் மறுநாள் சகசமாக தேனீரோடு சந்திப்போம்.

74ல் ஈழவாணனின் 'அக்கினிப் பூக்கள்' வெளிவந்திருந்தது. லோகேந்திரலிங்கம் நூலைத் தந்திருந்தார். அழகான அட்டை, கவிதைகள் எல்லாம் புதியவடிவமைப்பில் அச்சிடப்பட்டிருந்தன. கவிதைகள் சிலபற்றி எனக்கு காத்திரமான விமர்சனமிருந்தது. நான் அதுபற்றி எனது உடன்பாடற்ற விமர்சனத்தை லோகேந்திரலிங்கத்திடம் காட்டமாக கூறியதாக ஞாபகம். ஈழவாணன் குடும்பத்தாருடன் திருநெல்வேலிக்கு வந்திருப்பதாக கூறி, எங்களை அவருடன் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார். நான் டானியல் அன்ரனி, ராதேயன் ஆகியோர் அவரைத் திருநெல்வேலியில் சந்தித்தோம். லோகேந்திரலிங்கமும் உடனிருந்தார். 'அக்கினிப்பூக்கள்' கவிதைகள் பற்றி அவரோடு நெடுநேரம் விவாதித்தோம். தனது கருத்துக்களை அவர் நிதானமாக வெளியிட்டார். 'அக்னி' இதழொன்றை கவிதைகளுக்கானதாக் வெளியிட இருக்கும் தனது நோக்கம் பற்றியும் அப்போது அவர் குறிப்பிட்டது நினைவிலுள்ளது.

மிகவும் பின்தங்கிய வடமராட்சிக் கிராமமொன்றில் முதன்முதலாக 'அக்னி' இதழின் முதலாவது இதழை அறிமுகம் செய்ய எனக்கு ஒரு சந்தர்ப்பம் பின்னர் ஏற்பட்டது. மிகவிமரிசையாக அதனை நாம் நிறைவேற்றினோம். வழமைபோல காரசாரமான விவாதம். ஈழவாணன் நட்போடு அவற்றிற்கான எதிர்வினைகளை ஆற்றினார்.

75ஆம் ஆண்டு வேலைதேடி கொழும்பில் அலைந்தவேளை மருதானையில் ஒருவாரம் லோகேந்திரலிங்கத்தின் புகையிரத திணைக்கள் பிரம்மச்சரிய விடுதியில் தங்கினோம். மிக சங்கடமான சூழல் தண்ணியடிக்கும் வாலிபர்கூட்டம். நானும் அன்ரனியும் இதில் விதிவிலக்கு. நள்ளிரவுதாண்டி தெமட்டகொடவிலிருந்து போதையுடன் மருதானை நோக்கி அவர்கள் ஓடிச்செல்வார்கள். லோகேந்திரலிங்கம் எல்லோரையும் விஞ்சுவான். நானும் அன்ரனியும் பின்தங்குவோம். ஆயினும் சனைக்கமாட்டோம். அன்ரனியின் கண்பார்வை மங்கி வந்தகாலம். கண்ணாடி ஒன்றின் அவசியத்தை அவன் உணர்ந்திருந்தான். பொருளாதாரச்சுமை, தனது இழந்த தபாலதிபர் பதவியை மீளப்பெற அவன் விருப்புடன் இருந்தான். யாரோ ஒரு அரசியல்வாதியை சந்திக்கும் ஆர்வமிருந்தது. தினசரி குணசிங்கபுரம் சென்று யாழிலிருந்து வரும் லொறிகளைப் பார்க்கும் வேலை. அதில் எமது வருமானத்துக்காக இறால்கொம்பனிக்கு இறால் அனுப்பப்படும் என்ற நம்பிக்கை ஒரு மாதமாகியும் எந்தவித லொறியும் இறாலைக் கொண்டுவந்து சேர்க்கவில்லை. அன்ரனியோடு எந்தவித நம்பிக்கையுமற்று நானும் இழுபட்டு வந்தேன். வரிசசல் பீரிடும் கணங்கள். தெமட்டகொடையில் ஒரு Room எடுத்தோம். மிகவும் காரசாரமான விவாதங்கள் நிகழும் மனமுறிவு ஏற்படும் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க பரிசுப்போட்டி முடிவுகள் வெளிவந்த காலம். செய்தியை நண்பன் லோகேந்திரலிங்கம் ஈழவாணனின் மூலம் அறிந்திருந்தார். அப்போதுதான் ஈழவாணன் தினபதி. சிந்தாமணி ஆகியவற்றில் வேலை செய்வதை நாம் அறிந்தோம். ஒரு முற்பகல்நேரம் நானும் அன்ரனியும் MD குணசேன நிறுவனம் சென்று சந்திப்புச் சிட்டையில் பெயர் எழுதிக்கொடுத்து அவருக்காக காத்திருந்தோம். வேலைப்பழுவின் சுமையோடு அவர் சந்திக்க வந்தார். வேலைக்கான ஊதியப்பற்றாக்குறை 'அக்கினி' இதழின் தொடர்வருகை நெருக்கடிகள் பற்றிக் கதைத்தார்.

1983 கொழும்பில் ஒரு தனியார் நிறுவனத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த காலம் பேருந்தில் MD குணசேன நிறுவனத்தைக் கடந்து செல்லும்போது ஈழவாணனின் நினைவு எழும். பத்திரிகை நிறுவனம் எப்போதோ மூடப்பட்டு விட்டது. ஈழவாணன் என்ன செய்கிறார்? இக்கேள்விக்குரிய பதில் நெடுநாட்கள் அலைக்கழித்திருக்கின்றது. ஒரு தடவை டானியல் அன்ரனியின் 'வலை' வெளியீட்டு விழாவில் வைத்து அவரே ஈழவாணனின் மறைவைப் பற்றி என்னிடம் கூறினார். இன்று நண்பன் டானியல் அன்ரனியும் உயிரோடு இல்லை. ஆந்திராவின் புரட்சிக்கவிஞர்களான திகம்பர கவிகளை அறிமுகம் செய்த, வர்க்க ரீதியான போராட்டங்களை எப்போதும் ஆதரித்து நின்ற அந்த ஈழவாணனை அவர் வெளியிட்ட அக்னியை, அவனது அக்னிப்பூக்கள் கவிதைத் தொகுதியை. இளைய தலைமுறை விரிவாக ஆராய வேண்டும். ஏனெனில் இறுதிவரை விலைபேசாத கவிஞன் அவன்.

சிறுகதை

# ஆலா ஆலா பூப்போடு

பா. ரே

மாரிகால வானவில் மாலைநேர அடிவானில் ஏழு வர்ணங்களில் ஏழு வர்ணங்களில் அழகுகாட்டி மழை வரும் என்பதைக் கட்டியம் கூறியது.

குமரன் ஐந்தாம் ஆண்டு ஸ்கொலசிப் பரீட்சைக்காக மாலைநேர வகுப்பில் கலந்துகொண்டு வீடு நோக்கி வீதியால் வகுப்பு மாணவர்களுடன் நடந்து வந்துகொண்டிருந்தான். அந்தச் சின்னஞ்சிறார்கள் சீருடையின்றிப் பலவண்ண ஆடைகள் அணிந்தவர்களாக வந்துகொண்டிருப்பது, கதிர்காம யாத்திரைக் காலத்து பல வண்ண வண்ணத்துப்பூச்சிகள் பறப்பதை நினைவுக்குக் கொண்டு வந்தது.

தடீரென கல்லொன்று வீதியில் வந்து பட்டுத்தெறித்து நின்றது. புளிய மரத்தில் கல்லெறியும் மாணவர்களுக்கு அக்கல் ஒன்றும் ஆச்சர்யத்தைத் தரவில்லை. ஆயினும் தம்மை நோக்கி வீசப்பட்ட அந்தக்கல் தப்பித் தவறி தம் தலைமீது பட்டிருந்தால் தலையிலிருந்து இரத்தம் தண்ணீர் போன்று பாய்ந்தோடும் என்பதையும், வலியெடுக்கும், காயம் ஆற நாள் எடுக்கும், வருத்தம் தாள முடியாது அழுகை வரும் என்பதையும் அறிவர். இதனால் ஆத்திரம் ஆத்திரமாகப் பற்றிக்கொண்டு வந்தது. கல்வந்த திசை நோக்கிப் பார்வையை எறிந்தனர். கல் வந்த திசையைப் பார்த்துப் பற்களை நறநறவெனக் கடித்தனர். கெட்ட வார்த்தைகள் தெரியாததினால், தங்களின் அகராதியிலுள்ள வார்த்தைகளை அவர்கள் சத்தம்போட்டு உக்கிரமாக ஆத்திரத்துடன் உச்சரித்தனர்.

''அடேய்!''
''மடையா''
''போடா''
''எங்களுக்குக் கல்லால் அடிக்கிறாய்''
''பண்டி''
''மொக்கன்''
''நாய்''
''பூனை''
''எலி''
''குப்பை''
''ஊத்தையன்''

எதிரே அழுக்கடைந்த அரைக்காற் சட்டையும், கறுத்த வெறும் மேயும், பரட்டைத் தலையுமாக அவர்களின் வயதை ஒத்த ஒரு சிறுவன் நின்றுகொண்டிருந்தான். அவனைப் பார்க்க இவர்களுக்குத் தாங்கள் படிக்கும் அம்புலிமாமா புத்தகத்தில் படம்போட்ட அரக்கன் ஞாபகத்துக்கு வந்தான். இவர்களின் ஆவேசம் ஏதும் அவனைக் கிலிகொள்ள வைக்கவில்லை. அவன் பயம் என்பது ஏதும் அறியாத காட்டானாகத் தெரிந்தான்.

''டேய் குமரன், மார்க்கண்டு வீட்டில மாடு பார்க்கிற பொடியனடா''

''அடி குடுக்க வேணும்''

அந்தப் பெயர் தெரியாத மாடுமேய்க்கும் சிறுவன் தன் காலருகே கிடந்த மற்றுமொரு கல்லை எடுத்து அவர்களைக் குறிவைத்து எறிந்தான். தொலைதூரத்தில் நின்றதினால், கல்மீண்டும் அவர்களின் முன் நிலத்தில் பட்டுத் தெறித்தது.

இருபக்க ஆட்டத்தில் பாடசாலை மைதானத்தில் உதைபந்தாட்டத்தில் மோதி விளையாடும் அவர்களுக்கு, அவன் ஒருவன், பன்னிரெண்டு பேராகத் தெரிந்தான். கைகளில் இருந்த புத்தகங்களை நிலத்தில் விட்டெறிந்து அவனை நோக்கி ஓடினார்கள்.

கோல்போடப் பந்து கிடைத்த வீரர்களுக்கு அவன் பந்தானான்.

கைகால்கள் எங்கும் சிராய்ப்பு. கடைவாயிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

''டேய் பேரென்னடா?''
''அகத்தியன்''
''ஏன்டா கல்லடித்தாய்?''

''எனக்குக் கோபம்'' முனகினான். சிறுவர்கள் அவனைப் பார்த்தனர். இவனுக்கும் தங்களுக்கும் இடையில் என்ன கோபம்? இவன் பள்ளிக்கூடம் போகாதவன். தாங்கள் எப்போதும் இவனுடன் சேர்ந்ததே இல்லையே. அதுவும் அழுக்கானவன். எப்படி இவனுக்கு எங்களின்மீது கோபம் வரும்?

''என்ன கோபம்டா?'' குமரன் சத்தமாகக் கேட்டான்.

''நீங்கள் படிக்கிறது கோபம்'' மேலும் ஆச்சர்யம் அவர்களுக்கு.

''நீயும் படியன்''

''என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுங்கள்''

நிலத்தில் விழுந்து கிடந்த அகத்தியன் கண்ணீர் மல்க அவர்களிடம் வேண்டினான்.

அனைவரும் விபரம் புரியாமலேயே உள்ளுணர்வுகளில் தாக்குண்டவர்களாக, அவனைத் தூக்கி

நிமித்தினர். ஆறுதல் சொல்லி அவனைத் தேற்ற முயன்றனர்.

ஒருவன் தன் கால்சட்டைப் பக்கட்டிலிருந்து ஒரு நெல்லிக்காயை எடுத்து, அவனுக்குக் கொடுத்தான். குமரன் தன் கைலேஞ்சியை எடுத்து அவன் கடைவாயில் வழிந்த இரத்தத்தைத் துடைத்து விட்டான். இன்னொருவன் தன்னிடமிருந்த அழகிய ஸ்டிக்கர் ஒன்றினை அவனுக்குக் கொடுத்தான்.

அகத்தியன் மீண்டும் அவர்களைப் பார்த்துக் கேட்டான்.

''எப்போது என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்போறீங்க?''

சிறுவர்கள் என்ன சொல்லி அவனைத் தேற்றுவது எனத் தெரியாது அழுக்கடைந்த, அடிவாங்கிய அவன் முதுகில் கைவைத்துத் தடவிக்கொடுத்தனர்.

தொலைதூரத்தில் வெள்ளை நிறத்தில் தங்களின் பாடசாலை மூன்று மாடிக் கட்டிடம் அவர்களைப் பார்த்துச் சிரிப்பது போன்ற பிரமை.

அகத்தியனைப் பார்த்தார்கள். பாடசாலைக் கட்டிடத்தையும் பார்த்தார்கள். தாங்கள் அடிக்குமுன் விட்டெறிந்த புத்தகங்கள் வீதியில் இறைந்து கிடந்ததைப் பொறுக்கி எடுத்தபோது, அகத்தியன் மாத்திரம் தனித்து நின்றான்.

**யாரோ?**

யா.ரோ என்ற இச்சிறுகதை ஆசிரியரை உங்களுக்குத் தெரியுமா? 70களில் எழுத்துலகில் பிரவேசித்த இவர் இன்று எழுதுவதைக் குறைத்துக் கொண்டார். வடகிழக்கு கல்வி அமைச்சினால் இவரது சிறுகதை தொகுதி ஒன்று வெளியிடப் பட்டுள்ளது. திருகோணமலையை சேர்ந்த இந்த எழுத்தாளரை கண்டுபிடிப்பவர்களுக்கு ஈழத்துப் படைப்பான நூல் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும்.

யா.ரோவைக் கண்டுபிடியுங்கள்.

**உலகில் மிகக் கடினமானவை மூன்றே மூன்று மட்டுமே அவை:**

1. இரகசியங்களைக் காப்பது
2. பிறர் தீங்கை மறப்பது
3. ஓய்வை பயனுள்ள வழிகளில் செலவழிப்பது

—சிலோன்—

முடியுமா உங்களால் ????????

**வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்**

## மட்டக்களப்பு மாவட்டம்

01. அநாதை இல்லம் திருக்கோவில்
02. கடல் தீர்த்தம் திருக்கோவில்
03. குளக்கோட்ட மன்னனின் காலத்து ஆலயம் திருக்கோவில்
04. சிவலிங்கப்பிள்ளையார் ஆலயம் திருக்கோவில்
05. சங்கமன் கண்டி காட்டுப்பிள்ளையார் ஆலயம்
06. நடுகல் வாகரை
07. மலைக்குன்று, கதிரவெளி
08. பற்றைக்காடுகள், வாகரை
09. மலைக்குன்று வாகரை
10. மாலைக்காட்சி வாகரை
11. மாலைக்காட்சி வாகரை
12. ஐந்துதலைநாகத்தின் உருவகம் செதுக்கப்பட்டுள்ள மலைக்குன்று வாகரை
13. இரண்டு பிளவுபாறை, வாகரை
14. மலைக்குன்றுகள், வாகரை
15. மலைத்தொடர்கள் வாகரை
16. சேதமடைந்த ஆலயம் வாகரை
17. பாழடைந்த ஆலயம் வாகரை
18. காவல்தெய்வக் கோபுரக் வாகரை
19. கிராமிய கோயில் வாகரை
20. நாகபாம்பு வாகரை
21. கிராமியத் தெய்வம் வாகரை
22. ஆலயம் தீங்கள் 2 வாகரை
23. பொது மயானம், வாகரை
24. சருங்கல் வடிகால், வாகரை
25. படுக்கைக்கல், வாகரை
26. பெரிய கட்டுமுறிவுகுளம் புனரமைப்பு "வாகரை
27. கற்குகை, கதிரவெளி
28. மலைப்பாடி, கதிரவெளி
29. காட்டுக்காட்சி வாகரை
30. காட்டு மலைக்குன்று, கதிரவெளி

**வாழ்த்துகின்றோம்**



வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சினால் 2006ம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட எமது மண்ணின் முதுபெரும் கலைஞர் கலாவினோதன், கலாபூஷணம், முத்தமிழ்மாமணி த.சித்தி அமரசிங்கம் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

# புதுமைப்பித்தனைப் புரிந்துகொள்ளல்

- எஸ். சத்தியன் -

## பெண்கள் பற்றிய நோக்கு அல்லது சித்தரிப்பு

புராண இதிகாச புராதனப் பின்னணியில் அமைந்த கதைகளில் அதற்கேற்ப மரபார்ந்த இலக்கிய நடையும், திருநெல்வேலிச்சீமையின் தாமிரவருணிக் கரைகிராமப் பின்னணியில் அமைந்த கதைகளில் மண்ணின் மணம் வீசும் கிராமிய மொழிநடையும் கிண்டலான விமர்சனக் கூர்மை தெறிக்கும் கதைகளில் அதற்கேற்ப சொடுக்கும் மொழிநடையும், மனிதனின் துக்கங்களையும் மன அழுத்தங்களையும் விவரிக்கும் கதைகளில் அதற்கேற்ற நிதானமான மொழிநடையும் எவ்வித நெருடலுமில்லாமல் வெகுஇயல்பாக புதுமைப்பித்தனிடம் வெளிப்படுகிறது. கதைநிகழும் இடம், காலம், கதாபாத்திரங்களின் வாழ்க்கைச்சூழல் சார்ந்த பின்னணிக்கேற்ப மொழிநடையை வித்தியாசப்படுத்தி சாதனை புரிந்த படைப்பாளிகளில் சிறந்தவராகவும் புதுமைப்பித்தனைச் சொல்லலாம்.

சமூகத்தில் இரண்டாவது நிலை கீழ்மட்டத்தில் தள்ளப்பட்ட பெண்களின் மீது இரக்கங்காட்டும் புதுமைப்பித்தன், செயல்களை தர்க்க ரீதியாக நியாயப்படுத்துகிறார். அத்துடன் அவர்களின் இந்நிலைமைக்கு சமூகத்தின் சீரழிந்த கட்டுப்பாடுகள் தான் காரணம் என்பதை சுட்டிக்காட்டுகிறார். இராமாயணக் காவியத்தை பின்னணியாக வைத்து எழுதப்பட்ட 'சாபவிமோசனம்' கதையில் சீதையை அக்னிப்பிரவேசம் செய்வித்த ராமனின் செய்கையை, தனக்கேயுரிய விமர்சனப் பார்வையில் தன் கருத்தையும் பாத்திரங்களூடாகப் வலியுறுத்துகின்றன. புதுமைப்பித்தன். அதில் "மனத்தூய்மையில்தான் கற்பு, சந்தர்ப்பசைத்தால் உடல் களங்கமானால் அதலை என்ன செய்ய முடியும்" என்று கௌதம முனிவரைக்கொண்டே பேசவைக்கிறார். இதன் மூலம் இன்றைய பெண்ணியவாதிகளால் கேள்விக்குட்படுத்தப் படும் கற்புப்பற்றிய கருத்தை கற்பு எனும் கருத்து மிக வலுவாக இருந்த காலத்தில் கேள்விக்குட்படுத்தியவர். அதுவும் இந்துசமயத்தின், அதன் கலாச்சாரத்தை மிக கடுமையாக பின்பற்றும் ஒரு முனிவரைக் கொண்டு பேசவைத்ததன் மூலம் தான் புதுமைப்பித்தன் தான் என்பதை நிரூபிக்கின்றார்.

பாலியல் பிறழ்வு என்பதையும் சமூக கட்டுப்பாடுகளை மீறுதலும், அதேசமயம் அது இயற்கையின் தேவை என்பதையும் சமூகத்தின் நிலைப்பாடு காரணமாக இந்த இயற்கையின் தேவை உணர்ச்சிகள் உச்சமடையும் போது சமூக கட்டுப்பாடுகள் மீறுவதையும் இயல்பாகவே தன் கதைகளில் காட்டுகிறார். இந்த வகையில்தான் 'வாடா மல்லிகை' கதையில் ஸரசுவையும், 'கலியாணி'யில் கலியாணியையும் படைத்திருக்கிறார். இவ்விரு பாத்திரங்களும் சமூக கட்டுப்பாட்டை "உடைத்து உறவுகொள் ஆசைப்படுகிறார்கள்., கலியாணியில் அது ஒரு முறை நிகழ்ந்தும் விடுகிறது. ஆயினும் அவர்கள் இதை ரகசியமான முறையில்த்தான் செய்கிறார்கள், செய்ய ஆசைப்படுகிறார்கள். பூரணமாக சமூக கட்டுமானங்களிலிருந்து விடுபடுவதாக சொல்லவில்லை. அவ்வாறு சொல்வதற்கு புதுமைப்பித்தன் விரும்பவில்லை போலும் மற்றொருபுறம் வாழ்க்கையின் நிர்ப்பந்தம் காரணமாக ஒழுக்கத்தை மீறியவர்களாக 'துன்பக்கேணி'யில் மருதியையும் 'பொன்னகரத்தில் அம்மாளுவையும் படைத்திருக்கிறார். பிழைப்புத்தேடி இலங்கை சென்ற இடத்தில் அங்குள் தேயிலைத்தோட்ட அதிகாரிகளின் உடற்பசிக்கு பலவந்தமாகவே தீனியாக்கப் படுகிறாள் மருதி. வேறு வழியின்றியே இது தொடர்கின்றது. இவ்வாறே அம்மாளுவும் தன் கணவருக்கு கஞ்சிவார்ப் பதற்காவே தன்மீது நெடுநாட்களாக கண் வைத்திருந்த வனுடன் சென்று முக்கால் ரூபாய் சம்பாதிக்கிறாள். இவர்களின் செயல்பாடுகள்களின் முகத்தை சுளிக்க வைக்க வில்லை. அவர்கள் மீது. அவர்களையொத்த பெண்கள் மீது அனுதாபமும் மனித வாழ்க்கையின் அவலம் குறித்து கோபமும் கொள்ளவே வைக்கிறது.

மருதியின் வாழ்க்கைச் சூழல் வேறு, கலியாணியின் வாழ்க்கைச் சூழல்வேறு. இருவருக்கும் வெவ்வேறுவிதமான பிரச்சினைகள். தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தத்தில் பணிந்து போகிறாள் மருதி. தன் விருப்பப்படி முடிவெடுக்கிறாள். கலியாணியோ தன்விருப்பத்திற்கும் சமூதாயக் கட்டுப் பாட்டுக்கும் இடையே கிடந்து அல்லாடுகிறாள். சமுதாயத் தின் ஒழுக்கப் பார்வையில் இருவரும் களங்கமானவர்களே. ஆனால் சந்தர்ப்பசூழல், வாழ்க்கையின் நிர்ப்பந்தம், (சனாதனக் கட்டுப்பாடுகள்) காரணமாகவோ அவர்கள் அவ்வாறு நடந்து கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஒருத்தி மேல்சாதிப் பிராமணப்பெண். இன்னொருத்தி தாழ்ந்த சாதி சேரிப்பெண். இருவர் மீதும் வாசகனுக்கு வெறுப்போ, அருவருப்போ ஏற்படாமல், அனுதாபம் ஏற்படும் வகையில் அவர்களின் வாழ்க்கையின் அவலம் குறித்துச் சிந்திக்கும் வகையில் யதார்த்தமான பெண்களாக, மனித நேயத்துடன் அவர்களைத் தன் கதைகளில் சித்தரித்துக் காட்டியுள்ளார். புதுமைப்பித்தன். சாதி வேறுபாடுகளைக் கடந்த மனிதநேயப் பார்வையின் வெளிப்பாடுதான் இது.

மேலும் அவர்கதைகளில் வரும் பெண்கள் மிகுந்த சகிப்புத்தன்மையுடையவர்களாகவே காட்டப்படுகிறார்கள். வழக்கமான பெண்கள் போலவே கணவன், குடும்பம் என்று அவர்கள் சூழல் அமைக்கப்பட்டுள்ளது பொதுவாக எல்லாப் பெண் பாத்திரங்களும் ஆண்துணையின் ஆதரவு தம் நம்பிக்கையை பெறாமல் தனிமையில் பரிதவிப்பது போன்ற சித்திரமே நம் மனதில் உருவாகிறது. இவர்களில் ஒருத்திகூட வாழ்க்கை சார்ந்த பேராசை கொண்டவள் அல்ல. பெரும் கனவுகள் கொண்டவள். அல்ல குடும்பம், அக்குடும்பத்தில் தங்கள் எளிய கனவுகள் நிறைவேறும் சூழல் இவ்வளவு தான் அவர்களுக்குத் தேவை. அந்த வகையில் மேற்சொன்ன பாத்திரச் சித்தரிப்பை "கலியாணி, துன்பக்கேணி, பொன்னகரம், செல்லம்மாள், வாடாமல்லிகை, பாட்டியின் தீபாவளி, கோபாலபுரம், ஆண்மை, இரண்டு உலகங்கள், புதியகூண்டு" போன்ற கதைகளில் அவதானிக்கலாம். இதை அவர் தன் வாழ்க்கையில் கண்டதாக இருக்கலாம். அவருடைய மனைவியின் குணாம்சமாக இந்த சகிப்புத்தன்மை அமைந்திருந்ததை கமலாம்பாள் புதுமைப்பித்தனுக்கு எழுதிய கடிதங்களில் இருந்தும் இதை அறியலாம். ஆயினும் அவர் பெண்களை புரட்சிப்பெண் களாகவோ, சமூக கட்டுமானங்களை முழுமையாக உடைத் தெறிபவர்களாகவோ படைக்கவில்லை. இது ஓரளவு தன் சமூக கட்டுப்பாட்டை தளர்த்த விரும்பாமையினால் இருக்கலாம். அந்த வகையில் பாரதியார் போல பெண்கள் விடுதலையில் முற்போக்காக புதுமைப்பித்தன் செயல்பட வில்லை என்றே கூறவேண்டும். ஆனாலும் கருத்தியல் களத்தில் அல்லாமல் சிறுகதையில் யதார்த்தச் சித்தரிப்பைக் கொண்டவரையில் புதுமைப்பித்தனால் யதார்த்தத்தை மீறி தொழிற்பட்டிருக்க முடியாது என்பதும் உண்மை.

தொடரும்......

# குறுங்கதைகள் இரண்டு

## சாத்துப்படி

மனைவியின் அழகில் அவன் மயங்கி நின்றான்.

காலையில் காளிகோவில் திருவிழா விற்கு அவன் அவளை மோட்ட சைக்கிளில் அழைத்துச் செல்ல வேண்டும்.

அபிஷேகம் முடியப் போகுது கெதியாய் வாங்க.....? அவள் அவசரப்படுத்தினாள்.

அவன் அவளிடம் ஆறுதலாக கேட்டான்.

'காலையிலும் அம்பாளுக்கு சாத்துப்படி இருக்குதா.....'

இல்லை நேற்று இரவு உள்ள சாத்துப்படிதான்....'

அவன் சிரித்தான்.


அவளிடம் ஏன் என்ற கேள்வி முகத்தில் எழுந்தது? முகக்குறிப் பறிந்த அவன் அவளிடம் சொன்னான்.

அம்பாளுக்கு சாத்துப்படி ஒன்று. ஆனால் உனக்கு இரண்டாச்சே....

அவனை அவள் கோபமாக பார்த்தாள்.

அவன் மோட்டர் சைக்கிளை எடுக்க வேகமாக நடந்து கொண்டிருந்தான்.

(சாத்துப்படி அலங்காரம் செய்வது)



## இசைவாக்கம்

அந்தக் கிழவர் நடக்கமுடியாமல் தள்ளாடி, தள்ளாடி நடந்துகொண்டிருந்தார்.

நான் அவரை முந்தி அவரைத் திரும்பிப் பார்த்தேன்.

எலும்பும் தோலுமாகவும்.... முகம் வாடி வதங்கியும் உயிர் இல்லாத நடையுமாகவும் பார்க்கவே முடியாமல்.....

என் நடை தடைப்பட்டது.... அப்பு வாங்க வீட்ட சாப்பாடு தாரன்....

அந்தக் கிழவர் முகம்மலர்ந்து என்னைப் பார்த்தார். காலையில் மலர்ந்து மாலையில் வாடிப்போகும் மலரின் முகச் சாயலில்......

'என்ன சாப்பாடு?'

சோறு கறிதான்.....'

மச்சமா மரக்கறியா?'

கிழவரின் சொல் என்னை சூடேற்றியது.

'நாங்கள் மச்சம் தான். காளிகோவில் கௌரிகாப்பு திருவிழா நடக்குது அதுக்காக மரக்கறி'

'அப்ப வேணாம்' - கிழவர் மூன்றடி எடுத்து வைத்தார். என்னைத் திரும்பிப் பார்த்தார்.

'பசிக்கிற மனிசனுக்கு கூட சாப்பாட்டில மச்சம் கேட்குது என்ன....'

சந்திக் கடைக்காரரின் குரல் காற்றில் வந்தது.

நான் கடைக்காரனைப் பார்க்கவில்லை. கிழவரையே பார்த்தேன்.

'மகன் படுக்கைக்கு போக வேணும் எதால திரும்ப.........'

என் சூடேறிய உடம்பு குளிரத் தொடங்கிவிட்டது.

அப்பு வலது பக்கமாக திரும்பி நேராக நடவுங்க. மடத்தடிச்சந்திவரும். நேராக போனால் படுக்கை வரும்.

கிழவர் தலையாட்டினார்.

'வாரன் மகன்....'

இப்போது கிழவரின் முகத்தில் மாலையில் மலரும் மலரின் பொலிவு....

நான் என் வழிநடக்க ஆரம்பித்தேன்.

கடைக்காரார் என்னை ஆச்சரியமாகப் பார்ப்பது என் பிடறிக்கு தெரிந்திருக்கும்.

(படுக்கை-திருக்கடலூர்)

- திருமலை சுந்தா -

# இலக்கிய உலகம் - உள்ளே ஒரு பயணம்

- பிரான்சிஸ் லோகுநிசாமி

இலக்கியம் என்றால் என்ன? இந்தகேள்விக்கான பதில் அவரவர் அறிவுக்கேற்ப வகையில் பலவாறாக இருக்கலாம். இலக்கு + இயம் என்று அதைப்பிரிப்போமானால் இலக்கு என்றால் குறிக்கோள் என்றும் இயம் என்றால் இயம்புவது என்றும் பொருள் கொண்டு இலக்கியம் என்பது குறிக்கோளை இயம்புவது என்று பொருள் கொள்ளலாம். வெறும் குறிக்கோளை எழுதுவது என்பது வெறுமனே ஒரு கருத்தைத் தெரிவிப்பதாக அல்லது பிரச்சாரமாக அமைந்துவிடும். அது அந்த குறிக்கோளை தெரியாதவர்களை அல்லது சாதாரண வாசகனை தன்னிடமிருந்து தூரப்படுத்திவிடும். இதையும் கருத்திற்கொண்டுதான் இலக்கியம் என்பதற்கான பொருளை நாம் கூற வேண்டும். ஒருகாலத்தில் இலக்கு என்ற சொல்லுக்கு 'குறிப்பொருள் அல்லது குறிக்கப்படும் பொருள்' என்று பொருள். அந்தவகையில் இலக்கியம் என்ற சொல்லுக்கு 'குறிக்கப்படும் பொருள்' அதாவது இங்கே எழுத்துக்களால் குறிக்கப்படுவது எனக்கருதலாம். இவ்வாறு பலபொருள் இருக்கின்றது ஆயினும் ஒரு படைப்பாக அழகுருவமும் மனவெழுச்சிகளின் விளைவும் தர எழுதப்படுவது இலக்கியம் என வரையறை செய்யலாம்.

இக்கருத்தோடுதான் நாம் வெகுஜன இலக்கியம், உன்னத இலக்கியம், மக்கள் இலக்கியம் என்பதை வரையறுக்கிறோம். இங்கு வெகுஜன இலக்கியம் என்பது வெகுஜனக் கவர்ச்சியோடு வியாபாரத்தை முக்கிய நோக்கோடு கொண்ட இதழ்களில் வெளிவரும் படைப்புக்கள் என்பது பொதுவாகக்கொள்ளப்படுவது. சாதாரண மக்களில் பலரது வாசிப்புக்குள்ளாவது. சினிமாவில் காணப்படும் நாயக, நாயகி பாவத்தோடு ஒரு திட்டசட்டகத்திற்கு அமைவாக, சுவாரசியமாக, விறுவிறுப்போடு பொதுவாகக்காணப்படும். இதற்கு உதாரணங்களாக ரமணிச்சந்திரன், கல்கி, சாண்டில்யன் போன்றவர்கள் முதற்கொண்டு தற்போது எழுதிவரும் எண்ணற்றவர்களைக் கூறலாம்.

இதற்கு மாற்றாக உன்னத இலக்கியம் என்பது தூய்மைவாதம் பேசுபவர்களால் சொல்லப்படுவது. ஒரு குறிப்பிட்ட வட்டத்தைச் சேர்ந்த படித்தவர்களைக் கருத்திற்கொண்டு எழுதப்படுவது. முன் அசைங்களையும், வானம், வெளி, பிரம்மம், பிரஞ்ஞை போன்றவற்றை படைப்பாக்கினார்கள். இதன்மூலம் இவர்கள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நின்றார்கள். தூய்மையைப் பேணுவதற்காக விலகி நின்றால் விலகல்தான் வரும் என்பதை இவர்கள் உணராமல் விட்டார்கள். அத்துடன் இவர்களில் பெரும்பாலானவர்கள் பிராமணர்களாய் இருந்தபடியால் தம் இயல்புபோலவே நடந்துகொண்டார்கள். இதனால் இவர்களுக்கு மக்களிடம் வரவேற்பில்லை. இவர்கள் எழுதிய பத்திரிகைகள், சிற்றிதழ் என அழைக்கப்பட்டது. இதற்கு உதாரணமாக மணிக்கொடி இதழையும் அதில் எழுதிய மௌனி, ந.பிச்சமூர்த்தி போன்றோரையும் அவர்கள் வழித்தோன்றல்களையும் குறிப்பிடலாம்.

இவர்கள் தரமான இலக்கியங்களைப் படைத்தாலும் இவர்கள் வாழ்க்கை வறுமையில்த்தான் வாழ்ந்தார்கள். இதற்கு காரணம் வெகுஜன இதழ்களில் எழுதுபவர்கள் என்பதால் அவர்களை இவர்கள் கடுமையாகத் தாக்கினார்கள். அவர்களை இலக்கியவாதிகள் அல்ல என நிரூபிப்பதில் ஈடுபட்டார்கள். ஆயினும் இன்றுவரை நிலைமைமாறவில்லை.

சிற்றிதழ்காரர்கள் மக்களின் பிரச்சினையை எழுதவில்லை. யதார்த்தத்தை எழுதவில்லை என்று கூறிக் கொண்டு மார்க்சிய சார்புடைய எழுத்தாளர்கள் மக்கள் இலக்கியம் படைத்தார்கள். இவர்கள் யதார்த்தவாதத்தை ஆதரிப்பவர்களாக இருந்தார்கள். யதார்த்த வாதம் என்பது மிகஉயர்ந்த விமர்சன நோக்கு கொண்ட கலைப்பாணி என்பது மார்க்சியவாதிகளின் கருத்து. ஒரு சீரிய தத்துவார்த்தக் கண்ணோட்டமும் இலட்சிய நோக்கங்களும் கொண்ட (இவை வெளிப்படையாக தெரியவேண்டிய அவசியமில்லை) இந்த யதார்த்தவாதம், 'மெய்மை'எவ்வாறு உள்ளதோ அதை அவ்வாறே எதிர்நோக்குகிறது. அதன்காரணம் திரிபுக்கும மறைத்தலுக்கும் எதிராக பொய்மைக்கும் எதிராக உண்மையை உயர்த்திப்பிடிக்கிறது. மனித சுதந்திரம் என்ற லட்சியம் எவ்வாறு உண்மையில் மறுக்கப்பட்டு வஞ்சிக்கப்படுகிறது என்பதை காட்டும் யதார்த்தவாதம் இந்த நிலைமைகளை கடந்து செல்கின்ற பாத்திரத்தையும் வகிக்கிறது. கவனிப்புக்கு உட்படாத மக்களின் சார்பில் எழுதப்பட்ட யதார்த்தவாத இலக்கியம் பின்னர் முன்னுதாரணங்களை வர்ணிக்கும் இலக்கியமாக. ஆக்கபூர்வமான கதாநாயகன் போன்ற பாத்திரங்களை மட்டும் கொண்டவையாக சீரழிந்தது வருந்தத்தக்க விடயம். இதனால் யதார்த்தமான வாழ்க்கைப் போராட்டங்களிலிருந்து உண்மையான பாத்திரங்கள் உருவாவதற்கு பதிலாக கட்சித் தீர்மானங்கள், அரசாங்கக் கொள்கைகள் ஆகியவற்றினால் உருவான கைப்பாவைகளே தோன்றின.

இன்று யதார்த்தவாத்தை அழகியலோடு சேர்த்து ஆக்கப்பட்ட படைப்புக்களே நிலைத்திருக்கின்றன. அதைப்பற்றி பிறிதொரு இடத்தில் பார்ப்போம். மேற்குறிப்பிட்ட இந்த நிலை இன்றுவரையிலும் பெரும்பாலும் மாறாமல் இலக்கிய உலகத்தில் இருந்துவருவது வருந்தத்தக்கது.

# இவையே!

அண்டம் இருந்தது! அளவுகள் இல்லை!
அண்டப் படலம் அதிர்ந்து வெடித்தே
அனைத்தும் சிதறி.... அவையாம் விண்மீன்!
அனலாம் கதிரும் அவற்றினில் ஒன்றாம்!
சுற்றின கோள்கள்! சுழன்றது புவியும்!
முற்றிய பின்னர் முளைத்தன பயிர்கள்!
ஊர்வன நடப்பன உந்தியே பறப்பன
காக்கால் வாழ்வன கணுவும் உயிரெலாம்
வந்தன உலகிலே வாழ்ந்தது அமைதியும்!
வந்தான் மனிதன் 'வாழ்கின்றேன்' என்றான்!
வாழ்ந்தனை வீழ்ந்தனை வந்ததே தொல்லையும்!
ஆழ்ந்தனன் கற்றான் 'அறிவியல்' என்றான்!
மொழிகள் மதங்கள் மூண்டன போர்கள்!
அழிவுகள் தொடர்ந்தன, அச்சம் வளர்ந்தது!
'அரசியல்' என்றான், ஆயிரம் கட்சிகள்!
சுரண்டல் பணத்திமிர் தொடர்பிணி வறுமை!
பல்லினம் பல்லூர் பலபல நாடுகள்!
வல்லனை நல்லனை வளர்ந்தனை தேய்ந்தனை
பெரியனை சிறியனை பேரினம் சிற்றினம்!
இருந்தனை வந்தனை இணைந்தும் வென்றனை!
தோற்றனை விழித்தனை தூங்கியே இழந்தனை!
காற்றினால் நீரினால் கனலினால் அழிந்தனை!
ஓதுவர் பொதுநலம்! உள்ளமோ தன்னலம்!
பாதுகாப்பென்பது பறிப்பது மறிப்பது
அடக்குதல் ஒடுக்குதல் ஆட்டுதல் காட்டுதல்
முடக்குதல் கடத்துதல் மூட்டுதல் கூட்டுதல்
ஏமாற்றுதல் பொய் எல்லாம் நாடகம்!
நாமார்க்குரைப்பம்? நன்றார் தீதார்?
மனிதன் மோசம்! மானிலம் மோசம்!
புனிதம் கிடையா! போம்வரை துயரே!
மனிதன் இல்லையேல் மற்றுயிர் வாழ்ந்திடும்!
இனி எலாம் 'இவையே!' என் கருத்திதுவே!

"வெந்நீரூற்றான்"

# பலசாலி

அடிக்குது உதைகள்
அத்தனைகளையும் பொறுத்துப்
பார்த்தான் அவன்.
♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦
அவனின் மானம்
போற மாதிரி
நடுத்தெருவில் விட்டு
சாரத்தை
அவிழங்கடா...
♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦
தான் செய்த அந்த
தவறுக்காக பொறுத்துப்
பார்த்தான் அவன்
♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦
தனக்கு துயில் உரியும்
படலம் ஆரம்பமானபோது
அவன் -
கிருஸ்ண பரமாத்தமவை
அழைக்கவில்லை.
அந்த தெருவில் கிடந்த
கற்களைத்தான்
கிருஸ்ண பரமாத்வாக
கண்டான்.

-சிசு-

# துணிவு

உன்னுடைய பெயரென்ன?
அந்த பிச்சைக்காரன்
நிமிர்ந்து பார்த்தான்
உன்னுடைய பெயரென்ன
அவனே பதிலாக கேட்டான்
நான் அசந்து விட்டேன்
என்னிடம் உள்ள கேட்கும்
துணிவு போல......
அவனிடமும் அந்த
கேட்கும் துணிவு
இருக்கத்தானே வேண்டும்

-சிசு-

# "இன்பத் தமிழை இழிவுசெய்வோரை !"

01. கொடுவாளினை எடடா தம்பி! பாரில்
கொஞ்சு தமிழைக் கோதி யாழிப்போரை
நடுவீதியில் நிறுத்தி நாலாறாய் பிளந்து
நாய்களுக் குணவாக் கிடுவோம், யார்
தடுத்தாலும் பொன் கொடுத்தாலும் கேளோம்
தமிழுக் கிங்கிட றென்றால் தாளோம்
எடுத்தாலும் அள்ளிக் கொடுத்தாலு மின்பமாம்
எம்முயிர்த் தமிழெனச் சொல்லியே வாழ்வோம்.

02. அமுதமாம் தமிழை அழிக்க நினைப்போரை
அழைத்துவா தம்பி நட்டநடு வீதிக்கு
தமுக்கடித்துத் தாரை தப்பட்டை யொலிக்க
தலைதனை மழித்தவரைக் கழுதையி லேற்றி
குமுதவிழிக் குமரியர் குதூகலமா யாடிவர
குருதிபோலும் செஞ்சாயத்தா லவரைக் குளிப்பாட்டி
கமுகக்கட்டுகளைத் தோள்களிலேற்றி யவர்சுமந்துவர
கைச்சவுக்கால் அவருடலைப் பதம் பார்ப்போம்!

03. இன்பத் தமிழுக்கு இழிவுதர எண்ணுவோரை
இழுத்துவா தம்பி இருண்ட குகைக்குள்ளே
துன்பந் தந்தவரை வாட்டி வதைத்து, நாளும்
தூய தமிழின் பெருமையினைச் சாற்றி நிற்போம்
கன்னடம், தெலுங்கு, கவின்மலையாளம், துளுவென
கன்னித் தமிழுடன் கலந்த மொழிகளுண்டாயினும்
இன்பத் தமிழுக்கு இணைமொழி இல்லையடா என்று
இடித்துரைத்தே அவருக்குச் சாற்றி நிற்போம்!

கவிஞர். புரட்சிபாலன்

## உங்களுக்குத் தெரியுமா?

வண்ணத்துப் பூச்சிகள் தங்கள் பின்னங் கால்களால் சுவையை அறிந்து கொள்கின்றன.

தேனிக்கு மொத்தம் 5 கண்கள் உண்டு.

தேனீக்கள் மணிக்கு 7 மைல் வேகத்தில் பறக்கின்றன.

எறும்பு அதன் எடையைப்போல் 50 மடங்கு தூக்கிச் செல்லும்.

சில்வண்டுகளின் காதுகள் அவற்றின் முன்னங் கால்களில் உள்ளன.

மண்புழு தோலினால்தான் சுவாசிக்கின்றது.

எறும்பு 12 ஆண்டுகள் உயிர்வாழ்கிறது.

உவர்மலை கலைக்கூடம்
ஜெ. ஹர்ஷகுமார்
தரம் 5ᶜ
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி

### கணக்கு

*100 புறாக்கள் 100 நாட்களில் 100 கூடை அரிசி சாப்பிடும். அப்படியாயின் 10 புறாக்கள் 10 நாட்களில் எத்தனை கூடை அரிசி சாப்பிடும்.*

**(பதில் 1 கூடை அரிசி)**




R. Ramkey - grade 9 c

## மழலையர் ஒலி



செ. யோகதாரணி
5C

## விடுகதைகள்

01. சிறிய கிணற்றில் சுவையான நீர் அது என்ன?

02. வட்ட வட்டமாய் வாழ்வு தரும் பாய் ஊர் எல்லாம் சுற்றும் பாய் எல்லோரும்விரும்பும் பாய் அது என்ன பாய்? ரூபாய்

03. வீட்டுக்கு வந்த விருந்தாளி தங்குவதோஓராண்டு அது என்ன? கலண்டர்

04. தலையைச் சீவினால் நாக்கை நீட்டுவாள் அவள் யார்? பென்சில்

05. வெளியில் செல்லும்போது எம்மோடு வருவாள் உள்ளே வந்தபின்னர் கதவு மூலையில் கிடப்பாள் அவள் யார்? செருப்பு

Y. Jarthika
6ᶜ
தி/உவர்மலை
விவேகானந்தா கல்லூரி.
உவர்மலை. சிறுவர்கலைக்கூடம்

**நிகழ்காலத்திலும் - எதிர்காலத்திலும் உங்கள் மனம் இன்பத்திலேயே திளைக்க வேண்டுமானால் அதற்கு நீங்கள் விலையாகக் கொடுக்க வேண்டியது உங்களுடைய கடுமையான உழைப்பை மட்டுமே!**

**- சீனப் பழமொழி -**

# மாரி காலம், கோடை காலம் வந்துபோகும் ஊரில்.......

✍ பரிதி

காளான்கள் முகம்காட்டும்
கார்கால நேரம்
களிப்போடு சில்வண்டு
ரீங்காரம் போடும்!
மேகங்கள் தூறல்கள்
போடும் பொன் வேளை
தாகங்கள் தீர்த்துக்
கொள்ளும் பூஞ்சோலை!

'வரை'களிலே முகிலினங்கள்
தவமியற்றும் - காற்று
வந்தொரு உரசலிட
மழை பிறக்கும்!
தரைகளெங்கும் வெள்ளம்
படையெடுக்கும் - வறண்ட
குளங்களதைக் கண்டு மனம்
குதூகலிக்கும்!

மாரிகாலம் வந்ததெனில்
இப்படித்தான் ஊரில்
ஏரி,குளம் யாவும்
மூழ்குமெடா நீரில்!
வானமே இன்றெங்கள்
கூரையான போதில் - ஏரி
நிறைந்தாலும் கண்டுமகிழ
யாருமில்லை ஊரில் !

மாடிமனை யாவும் - இன்று
மண்ணில் விழலாச்சு
மரத்தடியே எங்களது
வாழ்விடங்களாச்சு!
காடுகளை வீடுகளாய்
கொண்டதென்ன பாவம் - ஆதி
வாசி போலவாழச் சொல்லி
யாரு போட்ட சாபம்?

மாரிகாலம், கோடைகாலம்
வந்துபோகும் ஊரில்
வசந்தகாலம் மட்டும் ஏனோ
வந்ததில்லை எங்கள் வாழ்வில்!
ஏரியெங்கும் நீர்நிறைந்து
ஆடி என்ன லாபம்? இந்த
ஏதிலிகள் வாழ்வில் ஒளி
என்று சாமி வீசும் ?

அடுத்த தலைமுறையேனும்
வீடுகளில் வாழுமோ?
அந்தரித்து சாகாமல்
ஊரில் உயிர்போகுமோ?
பழுத்த பின்னர் சாவுவரும்
பழக்கம் உண்டாகுமோ? - இல்லை
பாதிவழி நடக்கையிலே
ஆவிபறிபோகுமோ?